**ஆகரபத்தன பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 19 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அஆரபத்தனை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 05 இன் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |
| (ii) | சபைக்குச் சொந்தமான ரூபா 462,880 பெறுமதியான முச்சக்கர வண்டி மற்றும் ரூபா 279,300 பெறுமதியான கை வண்டிகளின் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |
| (iii) | நிலையான சொத்துக்களின் மீதி மூலதனத்தின் ஈடுபாட்டிற்கு வருமானத்தால் பங்களிப்பு செய்யும் கணக்கின் மீதிக்கு சமமாக வேண்டும் என்ற போதிலும் அந்த மீதிகள் இரண்டிற்குமிடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 1,162,194 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் மார்ச் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |
| (v) | இடம் மாற்றம் பெற்று வந்த அதிகாரி ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மீதி ரூபா 152,129 திரண்ட நிதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |
| (vi) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |

(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற 03 கணக்கு மீதிகளின் பெறுமதிகளை அந்த கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டுப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 238,274 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய காலத்தில் பயன்பாட்டுப் பதிவேடுகளுடன் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகள் இணக்கஞ் செய்யப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 12,810,629 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரிய உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களுக்கான உரித்துடைமைப் பத்திரங்கள் தயாரித்தல் மற்றும் ஆவணங்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இல் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 16 (2) ஆம் பிரிவு | வருடாந்த நிதியறிக்கையுடன் செயல்திறன் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | செயல்திறன் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணச் சட்டம் | 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் வரையான காலப் பகுதிக்குள் சேகரிக்கப்பட்ட முத்திரை வரி தேசிய வருவாய் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் பிரகாரம் வரிகளை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் முத்திரை வரி சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் வரித் தொகையை அனுப்பி வைக்காததோடு தற்போது பதிவு செய்ய விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2009 இல் 09 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரி சட்டம் | சபையினால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வரை சேகரிக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் வரித் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் பிரகாரம் வரி செலுத்துகை செய்யப்படல் வேண்டும். | இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நாட்டைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பாக பதிவு செய்யப்பட்டிருக்காமையால் வரித் தொகை செலுத்தப்படாத தோடு தற்போது பதிவுக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக விதி) விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | உரிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் உரிய கணக்கெடுப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | உள்ளூராட்சி ஆணையரின் 1988 மே மாதம் 17 ஆம் திகதியிட்ட இலக்கம் 1988/22 உடைய சுற்றறிக்கை | வீதவரி அறவிடப்படும் பிரதேசங்களில் சொத்து மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது மேற்கொள்ளப்படல் வேண்டும் எனினும் வீதவரி அறவிடப்படும் சொத்துகள் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அக்கரபத்தனை பிரதேச சபை 2018.03.20 ஆம் திகதியில் இருந்துதான் செயலாற்றத் தொடங்கியுள்ளதால் போதியளவு செயற்குழு இல்லாத காரணத்தால் குறைபாடுகள் நிகழ்ந்துள்ளதோடு தற்போது புதிய மதிப்பீடு ஒன்றைச் செய்வதற்காக பிரதான மதிப்பீட்டாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 1,504,768 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ஒன்பது மாதங்களுக்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 4,965,288 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,879,217 | 3,108,701 | 3,126,273 | 1,692,840 | 1,036,075 | 1,203,694 | 1,210,963 | 750,350 |
| வாடகை | 228,000 | 14,285 | 17,608 | 16,260 | 90,000 | 25,545 | 22,840 | 14,782 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,470,000 | 2,103,130 | 2,103,130 | - | 1,280,000 | 1,106,560 | 31,910 | - |
| ஏனைய வருமானம் | 3,101,000 | 1,519,065 | 2,481,271 | 793,183 | 5,531,600 | 992,044 | 782,588 | 719,088 |
| மொத்தம் | 12,678,217 | 6,745,181 | 7,728,282 | 2,502,283 | 7,937,675 | 3,327,843 | 2,048,301 | 1,484,220 |

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 892,938 தொகையான ஆதனவரி நிலுவையில் ஆண்டின் போதான அறவிடல் 34 சதவீதமாக இருந்ததுடன் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் அறவீடுகள் 40 சதவீதமாக இருந்தன | பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

(ஆ) நீர் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயற்படுத்தப்படும் 11 நீர் வினியோகத் திட்டங்களின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவைத் தொகை ரூபா 486,750 ஆகக் காணப்பட்டது. இது வரையில் நீர் வினியோகம் துண்டிக்கப்படாத ரூபா 2000 க்கும் அதிகமான தொகை நிலுவையாகக் காணப்படும் நீர் பாவனையாளர்களின் எண்ணிக்கை 46 ஆகக் காணப்பட்டதோடு அவர்களிடம் இருந்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 155,316 ஆகக் காணப்பட்டது. | பிரதேச சபை சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 49,029 நிலுவைத் தொகைக்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதோடு ரூபா 41,440 பெறுமதியான வருமானம் அறவிடப்பட்டுள்ளது. |

(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 397,683 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 393,500 | உரிய பணத்தை அறவிடுவதற்கு | பதில் கிடைத்திருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டு காலப் பகுதிக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு விசேட தேவையுடைய கிராமங்களின் அபிவிருத்தி செயற்திட்ட நிகழ்ச்சியின் கீழ் நாகசேன நகரத்தில் மலசல கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 616,770 தொகை செலவு மதிப்பிடப்பட்டு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்று ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகளைத் தொடங்குவதற்கான முற்பணமாக ரூபா 123,354 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த இடத்தின் உரிமை தொடர்பான பிரச்சினை காரணமாக செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளதோடு இதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்றுப் போயிருந்தது. | பிரச்சினை தீர்க்கப்பட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும். | அந்த இடத்தின் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கப் பெற்றதுமே சபை நிதியிலிருந்து எஞ்சியுள்ள நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் மகாவலி கங்கையில் கொட்டப்பட்டுக் கொண்டிருந்தன. | முறையான விதத்தில் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாத விதத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்ட குப்பை கொட்டப்படும் இடம் மண்ணிட்டு மூடப்பட்டுள்ளதோடு மீண்டும் அவ்வாறு செய்ய வேண்டாம் என பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் தொடர்பாக பிரதேச சபை போதியளவு அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் சபையில் பணி புரிந்த 05 ஊழியர்களிடமிருந்து அரசாங்க சேவை சேமலாப நிதிக்குரிய உறுப்பினர் தொகை செலுத்தப்பட்டிருக்காததோடு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்துவதற்காக ரூபா 177,690 ஒதுக்கப்பட்டு இருப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அந்த நிதியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் உறுப்பினர் தொகை செலுத்தப்படவில்லை. தற்போது அவர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆம் திகதிய இலக்கம் 2096 உடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசி கோபுரங்களை நிறுவுதல், வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசை கோபுரங்களை நிறுவுதல் மற்றும் அவற்றின் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் போன்றவற்றுக்காக கட்டணம் அறவிடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சபையின் எல்லைக்குள் நிறுவப்பட்டிருக்கும் கோபுரங்களுக்காக எவ்வித கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதித்து உரிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய கோபுரங்களை நிறுவியிருந்த நிறுவனங்களின் தகவல்களைத் திரட்டி கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | கொங்கிறீட் பாதை நிர்மாணங்களின் தரத்தைப் பரிசோதிக்கும் சோதனைகளை மேற்கொள்வதற்காக நுவரெலிய பிரதேச சபைக்கு உரிய ஒப்பந்ததாரர்களால் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனினும் கொங்க்றீட் பாதைகள் இரண்டினது தரத்தினைப் பரிசோதிக்க சபையினால் ரூபா 35,0000 தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | தேவையான உறுதிப்படுத்தல்களைச் செய்த பின்னரே பணம் செலுத்தப்படல் வேண்டும். | அந்த சங்கம் கண்டி பொறியியலாளர் காரியாலத்திற்காவது பணம் செலுத்தியிருந்தால் அவற்றுக்குரிய ரசீதுகளை சமர்ப்பிக்குமாறு ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 18 பதவிகளில் காணப்பட்ட 71 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்க வில்லை. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| செயலற்றுப் போயுள்ள 4 சக்கரங்கள் கொண்ட ட்ரக்டர் வண்டியொன்றும் டேலர் ஒன்றும் உபயோகப்படுத்தப்படாமல் வெறுமனே காணப்பட்டது. | பழுதுபார்த்து உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவற்றின் சேவை தேவைப்படுவதால் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் வலப்பனே பிரதேச சபையிடம் அவை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மெராயா நகரத்தில் அமைந்திருக்கும் கட்டிடத்தினுள் சபையின் ஆயுர்வேத மத்திய நிலையம் மற்றும் நூலகத்தை அமைக்க எதிர்பார்த்திருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 09 திகதி வரை கூட ஆயுர்வேத மத்திய நிலையம் மற்றும் நூலகம் அமைக்கப்படாமல் கட்டிடம் வெறுமனே காணப்பட்டது. | ஆயுர்வேத மத்திய நிலையம் மற்றும் நூலகத்தை கூடிய விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்கு என நிலையான ஆயுர்வேத வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாத காரணத்தாலும், மருந்து வழங்குனர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதாலும் ஆயுர்வேத மத்திய நிலையத்தை ஆரம்பிக்க முடியவில்லை. நூலக உதவியாளர் ஒருவர் இல்லாத காரணத்தால் நூலகத்தையும் ஆரம்பிக்க முடியவில்லை. |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்கு என தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டத்திற்கேற்ப 02 விடயங்களுக்கான செலவுகள், மதிப்பிடப்பட்ட செலவைத் தாண்டியிருந்ததோடு அவ்வாறு தாண்டியிருந்த செலவுகளுக்கு பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக சட்டம் 14 இன் பிரகாரம் முழுமையான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் நிர்வாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 193 இன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்குமிடையெ ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி மற்றும் நிர்வாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் | பதில் கிடைத்திருக்கவில்லை. |